DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

C.C.No.398/2023

Deposition of the	:	PW5	Caste	:	
Name	:	தர்மர்	Age	:	50
F/N	:	முத்து	Occupation	:	சிறப்பு சார்பு ஆய்வாளர்
Village	:				
District	:	இராமநாதபுரம்			

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 12th day of February 2024.

12.02.2024

(எதிரிகள் ஆஜர்).

முதல் விசாரணை

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.02.2023 ம் தேதி காலை 09,45 மணியளவில் நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி காலை 10.00 மணிக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சாத்தான்குளத்தை சேர்ந்த சுலைமான் மகன் அயூப்கான் கொடுத்த புகாரை வாக்குமூலமாக பெற்று காலை 10.30 மணிக்கு காவல் நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 59/2023 பிரிவுகள் 342, 294(b), 324, 506(ii) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல்அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

1. சம்பவ இடமானது கேணிக்கரை காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் கேணிக்கரை காவல் நிலையத்தை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். சாத்தான் குளத்திலிருந்து கேணிக்கரை காவல் நிலையம் 4 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு அரை மணி நேரத்தில் வந்துவிடலாம். கடந்த 09.02.2023 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வந்து புகார் மனு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து மறுநாள் தான் காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் பெற்றேன். புகார் மனுவிற்கும், புகார் வாக்குமூலத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான்.

2. புகார் வாக்குமூலத்தை நான் தான் எழுதினேன். புகார் வாக்குமூலத்தின்

அடிப்பகுதியில் வார்த்தைகள் சுருக்கி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடம் இல்லாததால் அவ்வாறு எழுதினேன். புகார் வாக்குமூலத்தை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து இல்லை என்றால் சரிதான். 10.02.2023 ம் தேதி வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். கேணிக்கரை காவல் நிலையத்திலிருந்து சமூகம் நீதிமன்றம் 2 பர்லாங்கு தொலைவில் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து சமூகம் நீதிமன்றத்திற்கு அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான்.

3. கேணிக்கரை காவல் நிலையத்திலிருந்து சமூகம் நீதிமன்றத்திற்கு தினமும் ஒரு காவலர் வருவார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையானது 18.02.2023 ம் தேதி சமூகம் நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு வந்ததற்கான காரணத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இடையே உள்ள உரிமையியல் வழக்கை சரி செய்வதற்காக பின்னிட்டு யோசனை செய்து ஒரு புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடையே இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை முடித்து கொள்வதற்காக பொய்யான புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கைக்கும், எதிரிகளுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை

(ஒப்பம்/–க.பிரபாகரன்)
நீதித்துறை நடுவர் எண்.2,
இராமநாதபுரம்.